SRI SANKARA ARTS AND SCIENCE COLLEGE
Autonomous
A Unit of Sri Kanchi Kamakoti Peetam Charitable Trust
and Affiliated to University of Madras / Accredited by NAAC with 'A' Grade

ENATHUR, KANCHIPURAM - 631 561.
Phone : 044 - 27264066
Mail : admin@sankaracollege.edu.in
Website : www.sankaracollege.edu.in

26/12/2019

# MINUTES OF MEETING OF THE BOARD OF STUDIES

**Department:** Tamil

**Venue:** Board Room

**Date:** DECEMBER 26 th, 2019

**Agenda:** Suggestions of methodologies for innovative teaching and evaluation techniques and other academic activities in the department.

**The following members were present in the meeting:**

1. Dr. J. RADHAKRISHNAN, Assistant Professor & Head, Department of Tamil, Sri Sankara Arts & Science College, Enathur, Kanchipuram - Chairman
2. Dr. G. JAYASHREE, Assistant Professor, Department of Tamil, Sri Sankara Arts & Science College, Enathur, Kanchipuram – Member
3. Dr. G. ANITHA, Assistant Professor, Department of Tamil, Sri Sankara Arts & Science College, Enathur, Kanchipuram – Member
4. Dr. T.S. JEYALAKSHMI, Assistant Professor, Department of Tamil, Sri Sankara Arts & Science College, Enathur, Kanchipuram – Member
5. Dr. S. SIVAGAMASUNDARI, Assistant Professor, Department of Tamil, Sri Sankara Arts & Science College, Enathur, Kanchipuram – Member
6. Dr. K.R. VENKATESAN, Principal, Sri Sankara Arts & Science College, Enathur, Kanchipuram - Special invitee

**The following members could not attend the meeting due to their prior commitments and were granted leave of absence:**

1. **Nil**

முந்தைய பாடத்திட்டக்குழுக் கூட்ட (11.07.2019) பரிந்துரைகளின் படி பின்வரும் நடைவடிக்கைகள் மேற்கொள்ளப்பெற்றன.

1. பாடத்திட்ட அடிப்படையிலான மொழிப்பாட நூல்கள் 2019-20 கல்வியாண்டு தொடக்கத்திலேயே கல்லூரியின் சங்கரா பதிப்பகம் மூலமாக முதலாம் ஆண்டிற்கு **'காஞ்சித்தமிழ் மாலை'** என்ற பெயரிலும் இரண்டாம் ஆண்டிற்கு **'தமிழ்த் தேன்துளிகள்'** என்ற பெயரிலும், சிறப்புத் தமிழ் மாணவர்களுக்கு **'தமிழோசை'** என்ற பெயரிலும் மூன்று நூல்களாக வெளியிடப்பெற்று மாணவர்களுக்கு வழங்கப்பட்டன.
2. முதுகலைத் தமிழ் பாடத்திட்டத்தில் வரும் **நந்திக்கலம்பகம்** குறித்த இலக்கண, இலக்கிய வரலாற்று ரீதியிலான விளக்கம் பெறும் வகையில் **16.10.2019** மற்றும் **17.10.2019** ஆகிய தேதிகளில் காஞ்சிபுரம் அரசு அருங்காட்சியகத்துடன் இணைந்து கருத்தரங்கம் நடத்தப்பெற்றது. இதில் தமிழ்நாடு அரசு தமிழ்வளர்ச்சித்துறை மேனாள் இயக்குநர் திரு. **கூ.வ. எழிலரசு,** சென்னை அருங்காட்சியக நாணயவியல் காப்பாட்சியர் **என். சுந்தரராஜன்,** பச்சையப்பன் ஆடவர் கல்லூரி தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் **அ. சக்கரவர்த்தி** உள்ளிட்ட 10 கல்லூரி பேராசிரியர்கள் கலந்துகொண்டு ஆய்வு கட்டுரைகள் வழங்கினர்.
3. தமிழக வரலாறும் பண்பாடும், இதழியல், இலக்கிய வரலாறு, பக்தி இலக்கியம், நாட்டுப்புறவியல், கோயிற்கலை, காப்பியங்கள் முதலான பாடங்களுக்கு அகமதிப்பீட்டுத் தேர்வுகளுக்குப் பதிலாக நாடகம், களப்பயணம் மூலம் தகவல் சேகரித்தல், மாதிரிகள் தயார்செய்துவந்து விளக்குதல், நேர்காணல்கள், காணொலி, ஒலி ஒப்படைப்புகள் வழங்குதல் முதலான பணிகள் கொடுப்பட்டு, அவற்றின் வழி அகமதிப்பீட்டு மதிப்பெண்கள் வழங்கப்பட்டன.
4. அடிப்படைக் கணினி, இக்கால இலக்கியம் ஆகிய பாடங்களுக்கும் வெகுசன ஊடகவியல் சான்றிதழ் படிப்புக்கும் இணையவழியாக அகமதிப்பீட்டுத் தேர்வுகள் நடத்தப்பெற்றன.
5. சுற்றுசூழல் விழிப்புணர்வு குறித்த அனைத்துலக மாநாட்டுக்கான அறிவிப்புகள் வெளியிடப்பெற்று, பல்வேறு பேராசிரியர்கள்

ஆய்வாளர்களிடமிருந்து பெறப்பெற்ற கட்டுரைகள் தணிக்கைசெய்யப்பெற்று மொத்த கட்டுரைகள் **'நிலம், நீர், நிழல்: தமிழ் இலக்கியங்களில் சூழலியல்'** *(ISBN: 978-81-939345-5-5)*, **'தமிழ் இலக்கியங்களில் சூழலியல் மேலாண்மைச் சிந்தனைகள்'** *(ISBN: 978-81-939345-6-2)* என்ற தலைப்புகளில் இரு நூல்களாகத் தயாரிக்கப்பெற்று, சென்னைப்பல்கலைக்கழக நூற்றாண்டு விழா கலையரங்கில் பிப்ரவரி மாதத்தில் நடத்த நடவடிக்கை எடுக்கப்பெற்றுள்ளது.

6. தமிழ் இணையக் கல்விக்கழகத்துடன் *(TAMIL VIRTUAL ACADEMY)* இணைந்து கணித்தமிழ்ப் பேரவை *(KANITHAMIZH PERAVAI - computer-tamil forum)* அமைத்து அதன் மூலம் மாணவர்களுக்குக் கணினியில் தமிழ் மொழியின் செல்வாக்கு மற்றும் பயன்பாடு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும் போட்டிகள், கருத்தரங்குகள், பயிலரங்குகள் நடத்த நடவடிக்கை எடுக்கப்பெற்றுள்ளது. அதன் காரணமாக கணித்தமிழ் நூல்கள் வாங்குதல், பயிலரங்கம், போட்டிகள் நடத்துதல் அகியவற்றுக்காக நிதியைப் பெறவும் நடவடிக்கை எடுக்கப்பெற்றுள்ளது.

இவையாவும் பாடத்திட்டக் குழுவினரால் பாராட்டப்பெற்று பின்வரும் பரிந்துரைகளும் ஆலோசனைகளும் தீர்மானங்களும் நிறைவேற்றப்பெற்றன.

- முதுகலை மாணவர்களின் ஆய்வுப் பார்வையை மேம்படுத்தும் நோக்கில் பழமையான ஆய்வு நூலகங்களுக்கு நேரில் சென்று தகவல் சேகரித்து அறிக்கை தரும் வகையில் கருத்தரங்கம் அமைக்க ஆலோசனை வழங்கப்பெற்றது.

  *Board suggessted the PG students to visit and access the books in the Ancient Research Libraries to promote the research activities and to submit a report based on their reserach.*

- மேலும், *shodhganga* முதலான இணைய தளங்களில் கிடைக்கும் முனைவர்பட்ட ஆய்வேடுகளைப் பயன்படுத்துவது, மதிப்பிடுவது குறித்தும் பயிற்சி வழங்க பரிந்துரைக்கப்பெற்றது.

  *Board recommended to provide training regarding the proper utility and evaluation of Ph.D. research projects available in the shodhganga website.*

- ‘ஆய்வு நெறிமுறைகளும் ஆய்வேடு எழுதுதலும்’ என்ற முதுகலைத் தாளுக்காக காஞ்சிபுரத்தை ஒட்டிய புலவர்கள், படைப்பாளர்களை நேரில் சென்று ஆராய்ந்து கட்டுரை வழங்க பரிந்துரைக்கப்பெற்றது.

  *Board emphasised the need of research paper about the region of Kanchipuram by way of interviewing the scholars and pandits and the men of letters in Kanchipuram in the name of ‘Ayvu Nerimuraigalum Aivedu ezhuthuthalum’.*

- ‘தலபுராணங்கள் காட்டும் வாழ்வியல் நெறிகள்’ என்ற பொருண்மையிலான பன்னாட்டுக் கருத்தரங்கம் அமைப்பதின் மூலம் தமிழ் இலக்கியங்கள் காட்டும் கலை, கலாச்சார, விழுமியங்களை, வரலாற்றை, வாழ்க்கையை மாணவர்களுக்கு எளிதில் எடுத்துரைக்க இயலும் என பரிந்துரைக்கப்பெற்றது.

  *Board recommended to conduct an International conference on “Thalapuranangal Kaattum vazhviyal Nerigal” for the purpose of instilling values, culture, art, history treasured in literature.*

- தமிழோடு தொடர்புடைய இசை, நாடகம், நாட்டுப்புறக் கலைகள், சைவசித்தாந்தம் குறித்து பயிலரங்குகள், மதிப்புக்கூட்டு பாடங்கள் உரிய வல்லுநர்களைக்கொண்டு நடத்த பரிந்துரைக்கப்பெற்றன.

  *Board suggested to conduct workshops, value-added lessons in music, drama, folklore, Caiva cittantam from Tamil Studies.*

- செயல்வழி அகமதிப்பீட்டுத்தேர்வுகளும் தலபயணங்கள் வழி கல்வியும் மதிப்பீடுகளும் தந்த மிக நல்ல விளைவுகளைச் சீர்தூக்கி உரிய ஆசிரியகள் பாராட்டப்பெற்றனர். இவ்வகை அகமதிப்பீடுகள் மிகுதிப்படுத்த மேலும் பல ஆலோசனை வழங்கப்பட்டன.

  *Board appreciated the efforts of teachers who practiced activity-based Internal tests and visiting temples successfully. some counselling regarding the functioning of the course was also given.*

**Signature of Members:**

1. Dr. J. RADHAKRISHNAN 26.12.2019

2. Dr. G. JAYASHREE 26.12.19

3. Dr.G. ANITHA 26/12/19

4. Dr. T.S. JEYALAKSHMI 26/12/19

5. Dr. S. SIVAGAMASUNDARI 26/12/2019

6. Prof. Dr. K.R. VENKATESAN 26/12/19.